# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1147/2022 P.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ஜானகி | க-பெ | ராமகிருஷ்ணன் |
| ஊர்: | : | பிள்ளையார்பட்டி | | |
| வயது: | : | 67/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | வீட்டுக்குடித்தனம் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.07.2026**

1 மற்றும் 2 ம் **எதிரிகள் ஆஜர். 3 எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

-----------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் பிள்ளையார்பட்டியில் வசித்து வீட்டுக்குடித்தனம் செய்து வருகிறேன். தேதி மாதம் நினைவில்லை சுமார் 6 முதல் 7 வருடங்களுக்கு முன்பு நான் வீட்டில் இருந்தேன். அப்போது எனது கணவர் மில்லில் வேலைக்கு சென்று விட்டார். அப்போது எனக்கு தெரியாத 3 பெண் நபர்கள் வந்தார்கள். எனது வீட்டிற்கு வந்து எனக்கு மாலை 5.30 மணியளவில் ஜூஸ் கொடுத்தார்கள். அதை நான் குடித்தவுடன் மயக்கம் அடைந்துவிட்டேன். எனக்கு ஒன்றும் தெரியவில்லை. எனது கணவர் வந்து என்னிடம் கேட்டபோது எனக்கு எதுவும் தெரியவில்லை. பின்னர் எனது கழுத்தில் அணிந்திருந்த 1 பவுன் தங்க நகை காணாமல் போயிவிட்டது. இது தொடர்பாக எடுத்து சென்றவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு எனது கணவருடன் காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லிபுகார் அளித்தேன். அந்த **புகார் அ.சா.ஆ.1**. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஒரு மாதத்திற்கு பிறகு செட்டிநாடு போலீசார் என்னை தொடர்பு கொண்டு காவல் நிலையம் வர சொன்னார்கள் அங்கு சென்று நான் எனக்கு சொந்தமான நகையை அடையாளம் காண்பித்தேன். தற்போது புகைப்படத்தில் காண்பிக்கப்படும் நகை என்னுடையது தான். அந்த **புகைப்படம் சா.பொ.1**. யார் எடுத்து சென்றார்கள் என்ற விவரம் எனக்கு அந்த சமயத்தில் தெரியவில்லை. தற்போது ஆஜர் எதிரிகளை தெரியாது.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரிகள் தான் அன்றைய தினம் எனக்கு ஜூஸ் கொடுத்தார்களா என்றால் இல்லை. அவர்களை எனக்கு தெரியாது.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.08 10:45:45 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1147/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராமகிருஷ்ணன் | த-பெ | சுப்பையாநாயுடு |
| ஊர்: | : | செட்டிநாடு | | |
| வயது: | : | 70/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | மில் வேலை | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **06.07.2026**

1 மற்றும் 2 ம் **எதிரிகள் ஆஜர். 3 எதிரி ஆஜர் இல்லை மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் செட்டிநாட்டில் வசித்து மில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மனைவி. தேதி மாதம் நினைவில்லை சுமார் 6 வருடங்களுக்கு முன்பு நான் வேலைக்கு சென்று விட்டேன். அப்போது வீட்டிற்கு வந்து மாலை 6.30 மணிக்கு பார்த்த போது எனது மனைவி தூங்கி கொண்டிருந்தார். அவரை எழுப்பி பார்த்த போது அவர் கழுத்தில் அணிந்திருந்த 1 பவுன் தங்கை செயின் காணவில்லை. பின்னர் எனது மனைவியின் உடல் நிலையை சரி செய்து கொண்டு காவல் நிலையம் சென்று நடந்த விவரங்களை சொல்லி புகார் அளித்த போது நான் உடன் இருந்தேன். போலீசார் சம்பவ சமயத்தில் என்னை விசாரணை செய்யவில்லை. போலீசார் விசாரணையில் 3 பெண்மணிகள் மேற்படி செயினை எடுத்து போனார்கள் என்று நான் தெரிந்து கொண்டேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். மேற்படி விவரங்களை எனது மனைவி சொல்லி தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.07.08 10:45:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.